சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி உயர்வில் 4% இட ஒதுக்கீடு வழங்குதல் – துணைக்குழு அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மாதிந–3.2)த் துறை

அரசாணை (நிலை) எண்: 29

நாள்: 03.11.2022
சுபகிருது, ஐப்பசி 17,
திருவள்ளுவர் ஆண்டு,2053

படிக்கப்பட்டது:

1. ஒன்றிய அரசின் அலுவலகக் குறிப்பாணை எண்.36012/2022–Estt(Res–II), நாள்.17.05.2022
2. திருமதி. கற்பகம் என்பவரின் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.20246/2021.
3. திரு. K. சீனிவாசன் என்பவரின் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். W.P.No.12634/2022.
4. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரிடமிருந்து வரப்பெற்ற கடித ந.க.எண்.5234/பணியமர்த்தல்/2021, நாள்.01.11.2022.

********

ஆணை:–

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அலுவலகக் குறிப்பாணையில், அரசுப் பணியிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி உயர்வில் 4% இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து ஒன்றிய அரசால் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவது மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட வழக்குகளில், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் அரசுப் பணி பதவி உயர்வுகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4% இடஒதுக்கீடு வழங்கக் கோரி வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு துணைக்குழுவினை அமைக்கலாம் எனவும், இக்குழு மேலும், பதவி உயர்வில் 4% இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து மாநில வரைவு கொள்கையினை இக்குழு அமைக்கப்பட்ட நாள் முதல் ஒரு மாத காலத்திற்குள் உயர்மட்டக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் அதற்குரிய ஆணையினை

வழங்குமாறும் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார் :-

1. துணைச் செயலாளர் / சார்புச் செயலாளர்,
   மனித வள மேலாண்மைத்துறை
2. துணைச் செயலாளர் / சார்புச் செயலாளர்,
   மாற்றுத்திறனாளிகள் நலத்துறை
3. துணைச் செயலாளர் / சார்புச் செயலாளர்,
   சட்டத்துறை
4. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (சிறப்பு அழைப்பாளர்),
5. துணை இயக்குநர் (பயிற்சி) மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்,
6. உதவி இயக்குநர் (பணியமர்த்தல்) மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்,
7. சட்ட ஆலோசகர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்.

6. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, அரசுப் பணியிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி உயர்வில் 4% இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து கீழ்க்காணுமாறு உறுப்பினர்களைக் கொண்ட துணைக்குழு அமைத்து ஆணையிடுகிறது:-

| | |
|---|---|
| 1. | அரசு துணைச் செயலாளர்,<br>மாற்றுத்திறனாளிகள் நலத்துறை |
| 2. | அரசு துணைச் செயலாளர்,<br>மனிதவள மேலாண்மைத்துறை |
| 3. | அரசு துணைச் செயலாளர்,<br>சட்டத் துறை |
| 4. | துணைச் செயலாளர், (சிறப்பு அழைப்பாளராக)<br>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,<br>சென்னை-3. |
| 5. | துணை இயக்குநர் (பயிற்சி), (கூட்டுனர்)<br>மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்,<br>சென்னை-5. |
| 6. | உதவி இயக்குநர் (பணியமர்த்தல்),<br>மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்,<br>சென்னை-5. |
| 7. | சட்ட ஆலோசகர்,<br>மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்,<br>சென்னை-5. |

7. மேலும், அரசுப் பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி உயர்வில் 4% இடஒதுக்கீடு வழங்குவது குறித்து துணைக்குழுவினரால் நிறைவேற்றப்படும் அறிக்கையில் கொணரப்படும் கருத்துக்களின் மீது கூர்ந்தாய்வு செய்ய ஏதுவாக உயர்மட்டக் குழு அமைப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்
அரசு செயலாளர்

பெறுநர்
அரசு செயலாளர், மனித வள மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை –09.
செயலாளர், சட்டத் துறை, தலைமைச் செயலகம், சென்னை –09.
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், சென்னை –05.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 03.
உதிரி நகல் / இருப்புக் கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 3/11/22
03/11/2022